III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

O.S.284/2019

Deposition of witness for the Plaintiff/PW1
Respondent solemnly by Tmt. R. Santhi Translator
in accordance with the provision of Act I for 1873 on 30-08-2023

Name :Azhagarswamy Caste :
Father's/Husband's Name: Calling :
Age : Religion :
Village : Taluk:

**1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பூ வியாபாரம் செய்து வருகிறேன். 1 ஆம் பிரதிவாதியை எனக்கு வியாபார ரீதியாக 7–8 வருடங்களாக பழக்கம். வழக்கு பற்றிய முழு விவரம் எனக்கு தெரியும். இந்த வழக்கில் 5 பரிகாரங்கள் கேட்டுள்ளேன். ரத்து செய்ய நான் கோரியுள்ள கிரைய பத்திரத்தில் நான் தரப்பினர் அல்ல. 2 வது பரிகாரத்திலுள்ள ஆவணத்தில் நான் தரப்பினர் அல்ல. நான் சரியான முத்திரை கட்டணம் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. நானும் ஒன்றாவது பிரதிவாதியும் எந்தவித பேச்சுவார்த்தை ஏற்படாமல் போட்டுக் கொண்ட ஒப்பந்தம் என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தம் பற்றியும் அதன் தேதி பற்றியும் 1 ஆம் பிரதிவாதிக்கு தெரியாது என்றால் சரியல்ல. ஒன்றாம் பிரதிவாதி தாவா சொத்தை விற்பது குறித்து எந்த பேச்சு வார்த்தையும் நடத்தவில்லை என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகாருக்கும் கிரைய ஒப்பந்தத்தி்ற்கும் இடையே 30 நாட்கள் இடைவெளி உள்ளது என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தத்தில் கால அவகாசல் 6 மாதம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கிரைய ஒப்பந்ததத்திற்கும் நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்புக்கும் இடையே 35 நாட்கள் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ளது பற்றி எனக்கு 22–05–2019 அன்று தான் தெரியும் என்றால் எனக்கு அதற்கு முன்னரே தெரியும். தாவா சொத்திற்கான வில்லங்கத்தை நான் போட்டு பார்த்தேனா என்றால் முதலாம் பிரதிவாதி போட்டு அந்த ஆவணத்தை என்னிடம் காண்பித்தார். 1 ஆம்

பிரதிவாதிக்கு நான் முன் பணம் கொடுத்தது பொய் என்றும் அது போன்ற பரிவர்த்தனை நடைபெறவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் முன் பணத்தை ரொக்கமாக கொடுத்தேன். நான் பூ வியபாரத்தில் 6 மாத காலமாக ஈட்டி வந்த வருமானத்தை வீட்டில் வைத்திருந்தேன். அதை வைத்து முன் பணம் கொடுத்தேன். 22-05-2019 க்கு முன்னர் முதலாம் பிரதிவாதியை சந்தித்து, எனக்கு தாவா சொத்தை விற்க உள்ளதாக ஒப்பந்தம் போட்டுவிட்டு வேறொருவருக்கு விற்பதாக முதலாம் பிரதிவாதி முயற்சித்து வருவது குறித்து, நான் அவரிம் கேட்டேன். அதற்கு அவர் தான் யாரிடமும் விற்பதாக இல்லை என்று கூறினார். எனினும், அவர் கிரைய பத்திரம் எழுதி கொடுக்க காலதாமப்படுத்தியதால் நான் அவர் மீது புகார் கொடுத்தேன். ஆதலால் நான் 22-05-2019 அன்று முதல் பிரதிவாதியை சந்தித்து பேசியதாக சொல்லியிருப்பது கற்பனை என்றால் சரியல்ல. நான் எனது பிராதில் குறிப்பிடப்பட்டுள்ள தேதிகள் முரண்பட்டுள்ளது என்றும் ஆதலால் நான் சொல்லியிருப்பது போல் கிரைய ஒப்பந்தம் நடைபெறவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 01-01-2018 முதல் 30-04-2019 வரையிலான எனது வங்கிக் கணக்கை தாக்கல் செய்ய தயாரா உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். எனது PAN card ஐ தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். 2017-2018, 2018-2019 ஆகிய வருடங்களுக்கு வருமான வரி செலுத்தியுள்ளேனா என்றால் செலுத்தியுள்ளேன். 2019-2020 வருடத்தில் எனது ஆண்டு வருமானம் ரூ.1,00,00,000 இருக்குமா என்றால் இருக்காது. அதற்கு குறைவாக தான் இருக்கும். நான் ஒரு பெருந்தொகையை முன்பணமாக கொடுத்திருக்கும் நிலையில், கிரைய ஒப்பந்தத்தை ஏன் பதிவு செய்யவில்லை என்றால் எனக்கு அது பற்றி தெரியவில்லை. எனது வருமான வரி கணக்கை தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். ஒரு மாதத்தில் தாக்கல் செய்வேன். நான் பண பரிவர்த்தனை சரிவர செய்யவில்லை என்றும் ஆதலால் தான் அதன் விவரங்களை பிராதில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஆதலால் கிரைய ஒப்பந்தம் பொய்யானது என்றும் போலியாக தயார் செய்யப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல.

(1 ஆம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).